—0—

# அனந்தபாகவதர்

நடுக்காவேரி என்னும் கிராமத்தில் கோவிந்தபாகவதர் என்னும் ஒரு மஹான் இருந்தார். அவர் போதேந்திர ஸ்வாமிகளிடம் அபாரமான பக்தி உடையவர். போதேந்திர ஸ்வாமிகளும், ஸ்ரீதர ஐயாவாளும் நாமகீர்த்தனத்தைப் பிரசாரம் செய்து கொண்டு ஸஞ்சரித்து வருகையில், இவருடைய கிருஹத்தில் வந்து தங்கினராம். அப்பொழுது கோவிந்தபாகவதர் பத்தினியுடன் போதேந்திர ஸ்வாமிகளுக்குப் பாத பூஜை செய்து உபசரித்தாராம். ஸ்வாமிகளுடைய பாததீர்த்தம் அவர் கிருஹத்தில் எங்கெல்லாம் ஓடிற்றோ, அங்கெல்லாம் துளஸிச் செடிகள் முளைத்தனவாம். ஸ்வாமிகளுடைய பாததீர்த்தத்தின் பிரபாவத்தை அறிந்த கோவிந்தபாகவதர், அந்த பாத தீர்த்தத்தை ஒரு குடத்தில் வைத்து பத்திரமாகப் பூஜித்து வந்தார்.

மஹாத்மாவான கோவிந்தபாகவதரின் ப்ரபௌத்திரரான அனந்தபாகவதரும் தன்னுடைய குலதனமான குருபாத தீர்த்தத்தை ஆராதித்து வந்தார். வருஷந்தோறும் ஸ்வாமிகள் ஆராதனையும் செய்து வருவது வழக்கம். அப்பொழுது குரு, பரமகுரு. பராபரகுரு, பரமேஷ்டிகுரு, கேசவாதிதுவாதச நாமங்கள், இவ்வாறு பதினறு பாகவதர்களை வரித்து ஆராதனை செய்து, அவர்களுடைய பாததீர்த்தத்தை க்ரஹித்துக் கொண்டு பூஜிப்பது வழக்கம். அந்த பாகவதர்களின் பாததீர்த்தத்தையும் குருபாத தீர்த்தத்தோடு கலந்து வைத்துக்கொள்வது வழக்கம். இந்த குல பரம்பரை வழக்கத்தை அனந்தபாகவதரும் நடத்தி வந்தார். இந்த ஸ்ரீபாததீர்த்தம் இப்பொழுதும் கோவிந்தபுரம் ஸ்ரீமடத்தில் இருந்துவருகிறது.

—0—

# நாராயணபாகவதர்

# நடுக்காவேரி வைத்யநாதபாகவதர்

நடுக்காவேரி என்ற ஊரில் வைத்ய நாதபாகவதர் என்ற ஒருமஹான் இருந் தார். மிகவும் வயோதிகர். அபூர்வமான கீர்த்தனங்கள் பாடுவார். ஸ்ரீ அண்ணுவை ஸந்தித்தது முதல் அவர் அடிக்கடி ஸ்ரீ அண்ணுவுடனேயே இருந்து வந்தார். சேங்கனூர் ஸ்ரீராமநவமி உத்ஸவத் திற்கு வருவது வழக்கம். திவ்யநாம கீர்த்தனத்தில் ''ஆஞ்சனேயமதிபாட லானனம்'' பாடும்போது, பாகவதர் களில் யாராவது ஒருவர் ஹனுமானைப் போல் அபிநயம் செய்வது வழக்கம். அப்போது பாகவதர்கள் 'குர் குர்' என்று குரங்கு சேஷ்டைகள் செய்வதும், பிறர் மேல் தாவுவதும், தலைசொரிந்து பேன் எடுப்பதுமான அபினயங்கள் செய்வார் கள். பார்ப்பவர்கள் 'கொல்'லென்று சிரிப்பார்கள். உண்மையில் ஹனுமார் இப்படித்தானா இருப்பார்?

ஒரு நாள் திவ்யநாமத்தில் வைத்ய நாதபாகவதரை ஹனுமாராக ஆகும் படி சேங்கனூர் அப்பா வேண்டிக் கொண்டார். அதற்கு பாகவதர், ''வாழைப்பழம் வேண்டுமானால் நான் பிடுங்கித் தின்னமுடியும். ஹனுமானைப் போல் ராமபக்திவந்துவிடுமா?'' என்றார்.

யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம்
தத்ரதத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம்
பாஷ்பவாரி பரிபூர்ணலோசனம்
மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ॥

என்ற ச்லோகப்படி, ஆனந்தபாஷ்பமும் மேனிசிலிர்ப்பும் உண்டாகி, தலைமேல் கைகுவித்து நர்த்தனம் செய்தால்தான் ஹனுமத்பாவமாகும். இந்த சுலோகப் படி எனக்கு பக்திவருமா? என்று கேட்ட பாகவதர், அதற்குமேல் பேசமுடியாமல் கண்ணீர் மல்கி கண்டமடைத்து, சிரமேல் கைகுவித்து நின்று ஆடினார். சேங்கனூர் அப்பா உடனே அவரை ஸேவித்து விட்டு, ஆஞ்சனேய ராக இப்பவே ஆகிவிட்டீரே! என்று சொன்னார்.

ஒருநாள் முத்துகிருஷ்ணபாகவதரும் வைத்தியநாத பாகவதரும் ஸ்ரீ அண் ணுவை தர்சிக்க வந்தார்கள். முத்து கிருஷ்ணபாகவதர் வைத்தியநாத பாகவதரைப்பார்த்து ஸ்ரீ அண்ணுவிடம், ''இவர் ஒரு கனவு கண்டாராம். அதை தங்களிடம் தெரிவித்து அதன் அர்த்தம் என்ன என்று கேட்கிறார்'' என்றார். ஸ்ரீ அண்ணு என்ன கனவு என்று கேட் டார். வைத்யநாத பாகவதரை ஒரு காரில் வைத்து நீங்களே டிரைவ் செய்துக் கொண்டு போகிறீர்களாம்! கடைசியில் ஒரு பெருமாள் கோவிலில் கொண்டு இறக்கி ஸன்னிதிக்கு அழைத்துச் செல் கிறீர்களாம்! ஸன்னதியில் பாகவதருக்கு மாலை சாத்தி, புதுவஸ்திரம் தலையில் கட்டி, சடாரியும் வைத்தீர்களாம்! இதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட் கிறார் அவர் என்றார். இன்னம் ஒரு வாரத்தில் தெரியும் என்றார் ஸ்ரீ அண்ணு. ஒரு வாரத்தில் வைத்தியநாத பாகவதர் பரமபதமடைந்து விட்டார்.

卐